செ.வெ.எண்-21 நாள்-12.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அரியலூர் மாவட்ட பிரிவின் சார்பாக மாவட்ட அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகள் 2019-2020 ஆம் ஆண்டிற்கு 22.10.2019 அன்று அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் காலை 9.00 மணி முதல் நடத்தப்படஉள்ளது.

கேரம் விளையாட்டு ஆண் பெண் இருபாலருக்கும் தனித்தனியாக 5ம் வகுப்பு வரை பயிலும் இளநிலை பிரிவுக்கு தனியாகவும், 6ம்வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் முதுநிலைப்பிரிவுக்கு தனியாகவும் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

இளநிலைப்பிரிவில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் பங்குகொண்டு முதலிடத்தினைப்பெறும் ஒவ்வொரு தனி நபருக்கும் ரூ.500/-, இரண்டாம் இடத்தினை பெறும் ஒவ்வொரு தனி நபருக்கும் ரூ.250/-, மூன்றாம் இடத்தினை பெறும் ஒவ்வொரு தனி நபருக்கும் ரூ.125/- தொகை வழங்கப்படஉள்ளது.

முதுநிலைப்பிரிவில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் பங்குகொண்டு முதலிடத்தினைப் பெறும் ஒவ்வொரு தனி நபருக்கும் ரூ.1,000/-மும், இரண்டாம் இடத்தினை பெறும் ஒவ்வொரு தனி நபருக்கும் ரூ.500/-, மூன்றாம் இடத்தினை பெறும் ஒவ்வொரு தனி நபருக்கும் ரூ.250/- தொகையும் வழங்கப்படஉள்ளது.

போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவ மாணவிகள் அவர்களின் விவரங்களை (**SDAT ONLINE APPLICATION**) **www.sdat.tn.gov.in** என்ற இணையதள முகவரிக்கு அரியலூர் மாவட்டத்திற்கு 21.10.2019 வரை சென்று பதிவு செய்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒற்றையர் போட்டியில் கலந்துகொள்பவர் இரட்டையர் போட்டியிலோ, இரட்டையர் போட்டியில் கலந்து கொள்பவர்கள் ஒற்றையர் போட்டியிலோ கலந்துகொள்ள இயலாது. இணையதளத்தில் (**ONLINE**) அரியலூர் மாவட்டத்திற்கு பதிவு செய்தவர்கள் மட்டுமே போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

போட்டிகளில் கலந்துகொள்ளும் பள்ளிகளில் பயிலும் கேரம் விளையாட்டில் ஆர்வள்ள இணையதளத்தில் அரியலூர் மாவட்டத்திற்கு பதிவு செய்த வீரர் வீராங்கனைகள் வரும் 22.10.2019 அன்று காலை 9.00 மணிக்கு அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கெள்ளப்படுகிறது. காலவரைவு தயார் செய்து போட்டி துவங்கிய பின்னர் வரும் மாணவ மாணவிகள் போட்டிகளில் கலந்துகொள்ள இயலாது என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**